வசதிகளிலே, இப்படிப்பட்ட பள்ளிகளைத் துவக்கி நடத்துவதற்கு, கடன் வசதி தந்தால் இந்தக் கல்வியிலே இருக்கின்ற ஏற்றத் தாழ்வை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. து. ரவிக்குமார்: குறைப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, இதை அரசு பரிசீலித்து, இனியாவது இதற்காக நிதி உதவி செய்யுமா என்று உங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்குத் துவக்கப் பள்ளி 759-ம், பழங்குடி மாணவர்களுக்குத் துவக்கப் பள்ளி 200-ம், ஆக மொத்தம் 959 பள்ளிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. தாட்கோமூலமாக மழலையர் பள்ளிகள் நடத்துவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39. திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

39—

குளிர்ப்பதனக் கூடம்

***1441—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரிய தாழையில் மீன்கள் பதப்படுத்தும் குளிர்ப்பதனக்கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பெரிய தாழையில் மீன்கள் பதப்படுத்தும் குளிப்பதனக்கூடம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீனவ நண்பர்களுக்காக அனேக நலத் திட்டங்களைச் செய்து இருக்கிறார்கள். மீனவர்களுக்காக ஒரு நல வாரியத் திட்டமே அமைத்து இருக்கிறார்கள். இதற்காக பெரிய தாழை மீனவ மக்களின் சார்பாகவும், என்னுடைய

2007 ஜனவரி 25]

சார்பாகவும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பெரிய தாழை மீனவ மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை, அவர்கள் மீன் பிடிக்கும் தொழிலை மட்டுமே நம்பி இருக்கிறார்கள். ஆகையால், இந்த மக்களின் நலன் கருதி தாங்கள் இதை மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதைத் தங்களின்வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தாழையில் ஏற்கெனவே அரசுக் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பனிக்கட்டி உற்பத்தி நிலையம் இலாபகரமாக இயங்காத நிலையில் அரசாணை நிலை எண் 338, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 2–8–1989-ல் ஆணையிட்டபடி மூடப்பட்டது. அதன்பிறகு தனியார் முதலீட்டில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் இப்பகுதியில் செயல்பட ஆரம்பித்தன. தற்சமயம் குளிர்பதனக்கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லாமல் இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே மீன்வரத்து அதிகமாக இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 40, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

40—

பால் குளிரூட்டும் நிலையம்

***4847—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் புதியதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?